திருவள்ளூர், செயற் பொறியாளர்(வே.பொ.) அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் - திரு.கு.சமுத்திரம், பி.இ.,(அக்ரி)

எண்.அ/ 1666/2020 | நாள் 18.01.2021

பொருள் பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி IV 2018-19, மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான போட்டித் தேர்வு - செயற் பொறியாளர் (வே.பொ.) திருவள்ளூர் அலுவலகம் - செல்வி இரா. அருணாதேவி, இளநிலை உதவியாளர் (பி.அ) - 04.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டது - இளநிலை உதவியாளர் பதவியில் 04.09.2020 முற்பகல் - பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை -
1) தலைமைப் பொறியாளர் (வே.பொ.) சென்னை - 35 அவர்களின் செயல்முறை ஆணை எண் அப2/19591/2020, நாள் 14.08.2020.
2) இவ்வலுவலக செயல் முறை ஆணை எண் அ/1666/2020, நாள் 24.08.2020
3) வேளாண்மை இயக்குநர், சென்னை - 5 அவர்களின் கடித எண் அபபி3/23567/2019, நாள் 20.07.2019.
4) செல்வி இரா. அருணாதேவி அவர்களின் கடித நாள் 04.09.2020

-------

ஆணை :-

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகள் மற்றும் கடிதங்களின்படி, 2018-19, மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் தொகுதி IVல் அடங்கிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய போட்டி தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, செல்வி இரா. அருணாதேவி அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) ஆக 04.09.2020 அன்று முற்பகல் இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்து கொண்டார்.

இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பதவியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக பார்வை (3)ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை-5 அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்ட தெளிவுரைகளின் அடிப்படையில், பணி நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை (4) காணும் கடிதத்தின்படி, 04.09.2020 அன்று முற்பகல் செல்வி இரா. அருணாதேவி அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) ஆக இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்து கொண்டதை அடுத்து, தனியர் பணியில் சேர்ந்து கொண்ட நாளான 04.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

(த.பி.பா)

இப்பணிவரன்முறை ஆணை கீழ்காணும் நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டது.

" The regularization is subject of the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination Group – IV for the 2018-19 and 2019-2020 recruitment".

செல்வி இரா. அருணாதேவி அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. மேலும், தகுதிகாண் பருவ காலத்தில் வரையறுக்கப்பட்ட துறை தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிடப்படும் எனவும், அதன் பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18/1/21

செயற் பொறியாளர்(வே.பொ)(பொ)
திருவள்ளூர்.

18/1/21

பெறுநர்

செல்வி இரா. அருணாதேவி,
இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல் - தலைமைப் பொறியாளர் (வே.பொ.) சென்னை - 35
அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் - கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.) சென்னை - 35
அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் - வேளாண்மை இணை இயக்குநர், திருவள்ளூர்
அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - இருப்புக் கோப்பு.